சார்பு நீதிமன்றம், பத்மனாபபுரம்

முன்னிலை: திரு. R. சாமுவேல் பெஞ்சமின், எம்.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி

2024–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 23–ம் நாள் செவ்வாய்கிழமை

**E.P.No.10/2023 in O.S.No.90/2015**

**CNR. No.TNKK07-000785/2022**

G. ராஜைய்யன் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

T. கிதியோன் ராஜ் (T. Gideon Raj) ... எதிர்மனுதாரர்/ பிரதிவாதி

இந்த மனு 08.01.2024 தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. V. ஜோஸ்பின் பெர்னார்டு அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. ஆல்வின் வேதமணி அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள்வரையில் எனது கவனமான பரிசீலனையின்கீழ் இருந்து வந்த பின் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்:

**உத்தரவு**

இம்மனுவானது மனு தபசில் சொத்துக்களை நீதிமன்றம் மூலம் ஏலம் விட்டு விற்பனைக்கு கொண்டு வந்து விற்பனை மூலம் கிடைக்கும் தொகையினை மனுதாரருக்கு சேர வேண்டிய தீர்ப்பாணை தொகைக்கு ஈடாக்கி கொள்ளத்தக்கதாய் உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 21 விதி 66 மற்றும் பிரிவு 151–ன்கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

R SAMUEL BENJAMIN

Digitally signed by R SAMUEL BENJAMIN
Date: 2024.01.23 16:36:54 +0530

2. **மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**:-

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை நிறைவேற்ற கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையில் மனுதாரர்/வாதிக்கு எதிர்மனுதாரர்/பிரதிவாதி ரூ.8,76,480/-யும் அதில் அசல் தொகை ரூ.5,28,000/-ற்கு வழக்கு தாக்கல் செய்த காலத்தில் இருந்து தீர்ப்பாணை தேதி வரை 9% வருட வட்டியுடனும், தீர்ப்பாணை தேதியில் இருந்து தொகை வசூலாகும் காலம் வரை அசல் தொகைக்கு 6% வருட வட்டியுடனும், வழக்கின் செலவு தொகையாக ரூ.80,972/-ம் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி தீர்ப்பாணை தொகையை செலுத்துவதற்கு எதிர்மனுதாரருக்கு போதிய வசதி இருந்தும் தீர்ப்பாணை தொகையை எதிர்மனுதாரர் செலுத்தவில்லை., அசல் வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் மீது எதிர்மனுதாரர்/பிரதிவாதி தாக்கல் செய்திருச்த மேல்முறையீட்டு எண் 48/2020 ஆனது கடந்த 18.10.2022 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட மனு தபசில் சொத்துக்கள் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால மனு எண் 118/2015-ல் ஏற்கனவே நீதிமன்றத்தால் பற்றுகை செய்யப்பட்டுள்ளது. எனவே நிறைவேற்றுதல் மனுவில் கண்ட மனு தபசில் சொத்துக்களை நீதிமன்றம் மூலம் ஏலம் விட்டு தீர்ப்பாணை தொகையை மனுதாரர் வ:சூலித்து கொள்ள கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்:-**

மனுவில் கண்ட கணக்கு விபரம் தவறானது. மேல்முறையீட்டு எண் 48/2020-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் மீது 2-வது மேல்முறையீடு மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தாக்கல் செய்ய எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஏற்பாடு செய்து வருகிறார். மனு தபசிலில் உள்ள மூன்று

R SAMUEL BENJAMIN
Digitally signed by R SAMUEL BENJAMIN
Date: 2024.01.23 16:37:01 +0530

சொத்துக்களின் மொத்த மதிப்பு ரூ.80,00,000/−ற்கும் அதிகமானதாகும். ஆனால் தீர்ப்பாணை தொகை ரூ.13,00,000/−ற்கும் குறைவானதாகும். 1−வது அயிட்ட சொத்து வீடும் வீட்டடி மனையும் ஆகும். அதை பொறுத்து பற்றுகை இல்லை. எனவே 1−வது அயிட்ட சொத்தை ஏலத்திற்கு கொண்டு வர இயலாது. மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. உபயதரப்பிலும் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் 5 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

. 5. இந்த மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

6. **பிரச்சனை**:-

இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. ம.சா.ஆ.2−ஐ பார்வையிடும் போது அசல் வழக்கு எண் 90/2015 மனுதாரர்/வாதியால், எதிர்மனுதாரர்/பிரதிவாதி மீது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதையும், மேற்படி வழக்கில் 23.06.2020 அன்று தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும், வழக்குரை தொகை ரூ.8,76,480/−யும், அதில் அசல் தொகை ரூ.5,28,000/−ற்கு வழக்கு தாக்கல் செய்த காலத்திலிருந்து தீர்ப்பாணை தேதி வரை 9% வருட வட்டியுடனும், தீர்ப்பாணை தேதியிலிருந்து தொகை வசூலாகும் காலம் வரை அசல் தொகைக்கு 6% வருட வட்டியுடனும் வழக்கின் செலவு தொகையாக ரூ.80,972/−ம் வாதிக்கு, பிரதிவாதி செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. ம.சா.ஆ.1−ஐ பார்வையிடும் போது எதிர்மனுதாரர் மேல்முறையீட்டு எண் 48/2020 தாக்கல் செய்துள்ளார் என்பதையும், மேற்படி மேல்முறையீடு 18.10.2022 அன்று தள்ளுபடி செய்யப்பட்டு ம.சா.ஆ.2 தீர்ப்பாணை ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் இந்நீதிமன்றத்தால் அறிய முடிகிறது. ம.சா.ஆ.3 மற்றும் 4−ஐ பார்வையிடும் போது அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண் 118/2015−ல் நிறைவேற்றுதல்

R SAMUEL BENJAMIN
Digitally signed by R SAMUEL BENJAMIN
Date: 2024.01.23 16:37:08 +0530

மனுவில் கண்ட 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களும் இந்நீதிமன்றத்தால் பற்றுகை செய்யப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது. எதிர்மனுதாரர் தரப்பில் நிறைவேற்றுதல் மனுவில் கண்ட சொத்துக்கள் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்டது கிடையாது என்பதாக கூறப்படவில்லை. எதிர்மனுதாரர் தரப்பில் மேல்முறையீட்டு எண் 48/2020-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் மீது இரண்டாவது மேல்முறையீடு மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எதிர்மனுதாரர்/பிரதிவாதி ஏற்பாடு செய்து வருவதாக 11.09.2023 அன்று தாக்கல் செய்த எதிருரையில் குறிப்பிட்டிருந்த போதிலும், இதுவரை 2-வது மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டதாகவோ, அதில் விசாரணை நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பாணையை நிறுத்தி வைக்க தடையாணை பிறப்பிக்கப்பட்டதாகவோ எவ்வித ஆவணங்களும் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே விசாரணை நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை நிறைவேற்றுவதற்கு எவ்வித தடையும் இல்லையென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

7. எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் நிறைவேற்றுதல் மனுவில் கண்ட 3 அயிட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு ரூ.80,00,000/-ற்கும் அதிகமானது என்றும், நிறைவேற்றுதல் மனுவில் 13,00,000/-ற்கும் குறைவாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென்றும் என்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண் 118/2015-ல் நிறைவேற்றதல் மனுவில் கண்ட 3 அயிட்ட சொத்துக்களும் இந்நீதிமன்றத்தால் பற்றுகை செய்யப்பட்டுள்ள நிலையிலும், மேற்படி 3 அயிட்ட சொத்துக்களை விற்பனை செய்ய உத்தரவு பிறப்பிக்கபட்டாலும் மேற்படி சொத்துக்களின் மதிப்புகளை நிர்ணயம் செய்த பிறகு தீர்ப்பாணை தொகைக்கு போதுமான தொகைக்குரிய சொத்துக்கள் மட்டுமே விற்பனை செய்யப்படும் என்பதாலும், மனு தபசில் சொத்துக்களை நீதிமன்றம் மூலம் ஏலம் விட்டு விற்பனை செய்யக்கூடாது என்ற

R SAMUEL BENJAMIN
Digitally signed by R SAMUEL BENJAMIN
Date: 2024.01.23 16:37:14 +0530

எதிர்மனுதாரர்/பிரதிவாதியின் எதிர்வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லையென்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலே விவாதிக்கப்பட்டதன் அடிப்படையில் நிறைவேற்றதல் மனுவில் கண்ட சொத்துக்களை நீதிமன்றம் மூலம் ஏலம் விட்டு அதிலிருந்து தீர்ப்பாணை தொகையை வசூலித்து கொள்ள மனுதாரர்/வாதி உரிமை உடையவர் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இறுதியாக, நிறைவேற்றுதல் மனுவில் கண்ட சொத்துக்களை நீதிமன்றம் மூலம் ஏலம் விட்டு விற்பனை செய்து விற்பனை மூலம் கிடைக்கும் தொகையை தீர்ப்பாணை தொகைக்கு ஈடாக்கி கொள்ள மனுதாரர்/வாதி உரிமை உடையவர் என்று மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. TEST BATTA BY 26.02.2024

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளரிடம் சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 23 ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R SAMUEL BENJAMIN
Digitally signed by R SAMUEL BENJAMIN
Date: 2024.01.23 16:37:21 +0530

சார்பு நீதிபதி

பத்மனாபபுரம்

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>**.

– இல்லை –

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்</u>**.

– இல்லை –

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>**.

| | | |
|---|---|---|
| ம.சாஆ.1 | 18.10.2022 | அன்று மேல்முறையீட்டு வழக்கு எண் 48/2020–ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | 23.06.2020 | அன்று அசல் வழக்கு எண் 90/2015–ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணயின் சான்றிட்ட நகல் |

| | |
|---|---|
| ம.சா.ஆ.3 | அசல் வழக்கு எண் 90/2015–ல் உள்ள இ.ம.எண்.118/2015–ன் மனு மற்றும் அதில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவு |
| ம.சா.ஆ.4 | நிறைவேற்றுதல் மனு சொத்துக்கள் பற்றுகை செய்யப்பட்டதற்கான பட்டியல் |
| ம.சா.ஆ.5 | 06.01.2023–ம் தேதியிட்ட மனு சொத்துக்கள் தொடர்பான வில்லங்க சான்றிதழ் |

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–</u>**

– இல்லை –

R SAMUEL BENJAMIN

Digitally signed by R SAMUEL BENJAMIN
Date: 2024.01.23 16:37:28 +0530

சா.நீ.

பத்மனாபபுரம்

PSC

Draft/Fair Order

E.P.No.10/2023 in

O.S.No.90/2015

Dt. 23.01.2024.